SINCE 2013

We Shine Academy®

guiding you to get through

TNPSC | TNUSRB | TET | SSC | BANK EXAM

**DAILY CURRENT AFFAIRS DATED ON 20/02/2026**






## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்



சென்னை எழும்பூரில் புனரமைக்கப்பட்ட தமிழ்நாடு ஆவணக் காப்பகம், வரலாற்று ஆராய்ச்சித் துறை கட்டடம், புதிய கண்காட்சிக் கூடத்தைத் திறந்து வைத்து, பழைமையான அரிய ஆவணங்களைப் பாதுகாக்க ஜப்பானிய திசு முறையில் செப்பனிடும் பணியை தொடங்கி வைத்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு,

# இலவச அறிவிப்புகள்: உச்சநீதிமன்றம் அதிருப்தி

நமது நிருபர்

**புது தில்லி, பிப்.19:** மக்களுக்கு இலவசங்கள் வழங்கும் நடவடிக்கை குறித்து கடும் அதிருப்தி தெரிவித்துள்ள உச்சநீதிமன்றம், இலவசங்களுக்குப் பதிலாக மாநிலங்கள் வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று அறிவுறுத்தியது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தடுக்கும் இத்தகைய இலவசங்கள் வழங்கும் கொள்கைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது என்றும் உச்சநீதிமன்றம் கூறியது.

தமிழ்நாடு மின் விநியோகக் கழகம் தாக்கல் செய்த ஒரு ரிட் மனு விசாரணையின் போது உச்சநீதிமன்றம் இவ்வாறு கூறியது.

மின்சார (திருத்தம்) விதிகள் 2024- இன் விதி 23-ஐ எதிர்த்து தமிழ்நாடு மின் விநியோகக் கழகம் அந்த ரிட் மனுவை தாக்கல் செய்துள்ளது.

விதி 23 தன்னிச்சையானது, நியாயமற்றது, அரசியலமைப்பிற்கு விரோதமானது மற்றும் மின்சாரச் சட்டம், 2003- ஐ மீறுகிறது என தமிழ்நாடு மின் விநியோகக் கழகம் தனது மனுவில் கூறியுள்ளது.

இலவச மின்சாரத் திட்டங்கள் போன்ற மாநில மானியங்களைப் பாதிக்கும் அந்த விதியை ரத்து செய்ய வேண்டும் என தமிழ்நாடு மின் விநியோகக் கழகம் கோரி வருகிறது.

அந்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்



போது, 'நாட்டில் உள்ள பெரும்பாலான மாநிலங்கள் வருவாய் பற்றாக்குறை உள்ள மாநிலங்களாக இருந்தாலும், அவை இதுபோன்ற இலவசங்களை வழங்குகின்றன' என்று நீதிபதிகள் கூறினர்.

இந்த வகையான பெரிய அளவிலான விநியோகத்தால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைபடுகிறது என்றும், அனைவருக்கும் இலவச மின்சாரம்,உணவு, மிதிவண்டிகள் வழங்குவதற்குப் பதிலாக வேலைவாய்ப்புகளை உருவாக்க மாநிலங்கள் பணியாற்ற வேண்டும் என்றும் நீதிபதிகள் கூறினர்.

இந்தியாவில் நாம் என்ன மாதிரியான கலாசாரத்தை வளர்த்து வருகிறோம்? மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த இயலாதவர்களுக்கு நலத்திட்ட நடவடிக்கையின் ஒரு பகுதியாக இலவச மின்சாரம் வழங்க விரும்புவது புரிந்து கொள்ளத்தக்கது.ஆனால்,யாரால் பணம் செலுத்த முடியும்? யாரால் பணம் செலுத்த முடியாது? என்ற வேறுபாட்டைக் காட்டாமல், நீங்கள் அனைவருக்கும் இலவசமாக விநியோகிக்கத் தொடங்கினால் அது ஒரு முரண்பட்ட கொள்கையாக மாறாதா? என்று தலைமை நீதிபதி கேள்வி எழுப்பினார்.

வேலைவாய்ப்புகளை உருவாக்க மாநிலங்கள் பாடுபட வேண்டும். காலை முதல் மாலை வரை இலவச உணவு வழங்கத் தொடங்கினால், பின்னர் இலவச மிதிவண்டி, இலவச மின்சாரம் என வழங்கினால் பின்னர் யார் வேலை செய்வார்கள்? என்றும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் கேள்வி எழுப்பினார்.

இருப்பினும், தமிழ்நாடு மின் விநியோகக் கழகம் தாக்கல் செய்த மனு மீது மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பி வழக்கு விசாரணையை ஏப்ரல் 13-ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.



# ஏ.ஐ. துறையில் ரூ. 10 லட்சம் கோடி முதலீடு

**முகேஷ் அம்பானி**

புது தில்லி, பிப். 19: 'செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பத் துறையில் அடுத்த ஏழு ஆண்டுகளில் ரூ.10 லட்சம் கோடி முதலீடு செய்வோம்' என்று ரிலையன்ஸ் குழுமத் தலைவர் முகேஷ் அம்பானி வியாழக்கிழமை அறிவித்தார்.

புது தில்லியில் நடைபெற்று வரும் ஏஐ உச்சிமாநாட்டில் இந்த அறிவிப்பை வெளியிட்டுப் பேசிய அவர், 'ஜியோ புரட்சி மூலம் இணையத் தரவுகளை சாமானியர்களுக்கும் எட்டச் செய்தது போல, ஏஐ தொழில்நுட்பத்தையும் மிகக் குறைந்த விலையில் இந்தியர்களுக்கு வழங்குவோம்' என்றார்.

அவர் மேலும் கூறுகையில், 'இந்த முதலீட்டின்கீழ், குஜராத்தின் ஜாம்நகரில் ஜிகாவாட் அளவிலான அதிநவீன தரவு மையங்கள் மற்றும் ஏஐ கட்டமைப்புகள் அமைக்கப்பட உள்ளன.

ஆந்திரம் மற்றும் குஜராத்தின் கட்ச் பகுதியில் அமைக்கப்படும் சூரிய மின்சக்தி திட்டங்களில் உற்பத்தியாகும் 10 ஜிகாவாட் உபரி பசுமை எரிசக்தியைப் பயன்படுத்தி இந்த மையங்கள் இயங்கும்.

இந்தியாவின் கடைக்கோடி பகுதிகளுக்கும் அதிவேக ஏஐ சேவைகளைக் கொண்டு சேர்க்கும் வகையில், நாடு தழுவிய ஜியோவின் தொலைத்தொடர்பு அமைப்பு பயன்படுத்தப்படும்.

இந்தியா தனது அறிவுத்திறனுக்காக பிற நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை. நாட்டின் மக்கள்தொகை, ஜனநாயகம், எண்ம உள்கட்டமைப்பு, தரவு உருவாக்கம் ஆகியவையே நமது மிகப் பெரிய பலம்.

2047-ஆம் ஆண்டுக்குள் 'வளர்ந்த இந்தியா' இலக்கை எட்ட ஏஐ ஒரு முக்கிய கருவியாக இருக்கும். எனவே, இந்த முதலீடு வெறும் லாப நோக்கத்துக்காகவோ அல்லது பங்குச் சந்தை மதிப்பை உயர்த்துவதற்காகவோ செய்யப்படவில்லை; மாறாக, தேசத்தைக் கட்டமைக்கும் நோக்கில் நீண்ட கால அடிப்படையிலான முதலீடு.

இதன்மூலம், இந்தியாவின் சிறு வணிகங்கள் முதல் பெரு நிறுவனங்கள் வரை அனைத்தும் உலகத் தரத்திலான தொழில்நுட்ப வளர்ச்சியைப் பெறும். உலகின் மிகப்பெரிய ஏஐ வல்லரசாக இந்தியா உருவெடுக்கும்' என்றார்.



# காஸா மறுசீரமைப்புக்கு ரூ.1.55 லட்சம் கோடி

**அமைதிக் குழுவின் முதல் கூட்டத்தில் அறிவிப்பு**

BOARD of PEACE



# ஏ.ஐ. பயன்பாட்டுக்கு 5 அம்ச தொலைநோக்குப் பார்வை

**புது தில்லி மாநாட்டில் முன்வைத்தார் பிரதமர் மோடி**

புது தில்லி, பிப். 19: செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்ப பயன்பாட்டில் மக்களை மையப்படுத்திய அணுகுமுறைக்காக, இந்தியாவின் 5 அம்ச 'மானவ்' தொலைநோக்குப் பார்வையை முன்வைத்து எடுத்துரைத்தார் பிரதமர் மோடி.

இது தொடர்பாக, தில்லி ஏ.ஐ. தாக்க உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், 'ஏ.ஐ. தொழில்நுட்ப பயன்பாட்டில் தேசிய இறையாண்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். அந்த வகையில், இந்தியா சார்பில் 'மானவ்' தொலைநோக்குப் பார்வையை முன்வைக்கிறேன். இது, தார்மிகநெறிமுறை, பொறுப்பான நிர்வாகம், தேசிய இறையாண்மை, அனைவருக்குமான அணுகல்–உள்ளடக்கம், சட்டப்பூர்வ பயன்பாடு ஆகிய 5 அம்சங்களை உள்ளடக்கியது' என்றார்.

உச்சிமாநாட்டில் உலகத் தலைவர்களின் முழு அமர்வில் பேசிய பிரதமர், 'இந்தியா கடவுள் புத்தரின் புண்ணிய பூமி. சரியான புரிதலில் இருந்தே சரியான செயல் பிறக்கும் என்பது புத்தரின் போதனையாகும். ஏ.ஐ. தொழில்நுட்ப பயன்பாட்டில் நெறிமுறையற்ற செயல்பாடுகளுக்கு வரம்பில்லாத வாய்ப்புகள் உள்ளன. எனவே, வெளிப்படையான, தெளிவான பாதுகாப்பு நெறிமுறைகள் மற்றும் விதிமுறைகளுக்கான செயல் திட்டத்தை உருவாக்குவது அவசியம். ஏ.ஐ. நிறுவனங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. தரவு இறையாண்மை மதிக்கப்படுவதுடன், ஏ.ஐ. பயிற்சிக்கு தெளிவான தரவு கட்டமைப்பு வேண்டும்.

தொழில்நுட்பத்தை அதிகாரத்துக்கான கருவியாக அல்லாமல், சேவைக்கான தளமாக பயன்படுத்துவதால், இந்தியாவில் சமீப ஆண்டுகளில் எண்ம பொது உள்கட்டமைப்பு துடிப்பாக மாறியுள்ளது' என்றார்.

தில்லி உச்சி மாநாட்டில் இந்திய நிறுவனங்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏ.ஐ. மாதிரிகள் மற்றும் கைப்பேசி செயலிகளையும் பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார்.

ஏ.ஐ. தாக்க உச்சிமாநாட்டில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி.

**ஸ்விட்சர்லாந்தில் அடுத்த மாநாடு**

அடுத்த ஆண்டு ஏ.ஐ. உச்சிமாநாட்டை ஸ்விட்சர்லாந்து நடத்தவுள்ளதாக, அந்நாட்டின் அதிபர் கய் பார்மேலின் தெரிவித்தார்.

தில்லி ஏ.ஐ. தாக்க உச்சிமாநாட்டில் வியாழக்கிழமை பங்கேற்ற அவர், பிரதமர் மோடியுடன் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், 'தில்லி ஏ.ஐ. தாக்க உச்சி மாநாடு, குறிப்பிடத்தக்க மைல்கல். அடுத்த உச்சிமாநாட்டை ஸ்விட்சர்லாந்து நடத்தவுள்ளது. இதன் மூலம், எண்ம கொள்கை மற்றும் விதிகள் அடிப்படையிலான சர்வதேச ஒழுங்குமுறையை உறுதி செய்வதில் எங்களின் நிலைப்பாடு வலுப்படும்' என்றார் பார்மேலின்.

| **India–France Year of Innovation** | **இந்தியா–பிரான்ஸ் புதுமை ஆண்டு** |
|---|---|
| | **1.அடிப்படை தகவல்கள் (Basic Facts)**<br>• முயற்சி: **India–France Year of Innovation (2026)**<br>• நோக்கம்:<br>  ○ தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் |




## 1. Basic Facts

- Initiative: **India–France Year of Innovation (2026)**
- Purpose: Promote cooperation in **technology & research**
- Focus areas: AI, defence, digital technology

## 2.Strategic Background

- India–France Strategic Partnership started in **1998**
- Strong cooperation in:
  - Defence
  - Indo-Pacific region
  - Space & nuclear energy

## 3. Key Areas of Cooperation

 **Artificial Intelligence (AI)**

- Both countries support:
  - Safe AI
  - Ethical AI
  - Human-centric AI development

 **Defence Cooperation**

- India purchased **Rafale fighter jets**
- Manufactured by Dassault Aviation
- Strengthens India's air power

 **Innovation & Start-ups**

- Collaboration between:
  - Start-ups
  - Scientists
  - Tech companies

- முக்கிய கவனம் செலுத்தும் துறைகள்:
  - செயற்கை நுண்ணறிவு (AI)
  - பாதுகாப்பு (Defence)
  - டிஜிட்டல் தொழில்நுட்பம்

**2.strategic Background)**

- இந்தியா–பிரான்ஸ் மூலோபாய கூட்டாண்மை தொடக்கம்: **1998**
- வலுவான ஒத்துழைப்பு உள்ள துறைகள்:
  - பாதுகாப்பு
  - இந்தோ-பசிபிக் பிராந்தியம்
  - விண்வெளி மற்றும் அணு ஆற்றல்

**3.முக்கிய ஒத்துழைப்பு துறைகள் (Key Areas of Cooperation)**

 **செயற்கை நுண்ணறிவு (AI)**

- இரு நாடுகளும் ஆதரிப்பது:
  - பாதுகாப்பான AI
  - நெறிமுறை சார்ந்த AI
  - மனித மையப்படுத்தப்பட்ட AI வளர்ச்சி

 **பாதுகாப்பு ஒத்துழைப்பு (Defence Cooperation)**

- இந்தியா வாங்கிய போர் விமானங்கள்:
  - Rafale
- தயாரிப்பு நிறுவனம்:
  - Dassault Aviation

 இது இந்தியாவின் வான்படை வலிமையை அதிகரிக்கிறது.

 **புதுமை மற்றும் ஸ்டார்ட்அப் (Innovation & Start-ups)**

- ஒத்துழைப்பு நடைபெறுவது:
  - தொடக்க நிறுவனங்கள் (Start-ups)
  - விஞ்ஞானிகள்
  - தொழில்நுட்ப நிறுவனங்கள்

 இது ஆராய்ச்சி கூட்டாண்மையை (Research Partnerships) வலுப்படுத்துகிறது

The Best Coaching Institute For TNPSC, Bank, SSC, Police Exam, TET Exam, Railways Exams
8939 144 344 www.weshineacademy.com

| | |
|---|---|
| • Boosts research partnerships | |








'தமிழ்த் தாத்தா' **உ.வே. சாமிநாதையரின்** பிறந்த நாளான **பிப்ரவரி 19**, இனி '**தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாக**' கொண்டாடப்படும் என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார். ஓலைச்சுவடிகளில் இருந்த பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடிப் பதிப்பித்த உ.வே.சா-வின் அரும்பணியைப் போற்றும் வகையில், அவரது பிறந்தநாள் (பிப். 19) தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாளாகக் கொண்டாடப்படுகிறது.



Led by Chengalpattu, Kancheepuram and Chennai, state's northern belt registers strong performance, closely followed by the districts in the west; agrarian and rural districts lag

# 32 of 38 districts in TN record above national average per capita income

## FEAT IN FIGURES

- **Rs 3.13 lakh** average per capita of Tamil Nadu
- **3rd** in the country after Telangana and Karnataka, but ahead of Gujarat and Maharashtra
- **Rs 5 lakh** (approx) disparity between the top districts the rest
- Agrarian and rural districts among bottom **10**

■ K BALASUBRAMANIAN

**CHENNAI: Led by the highly industrialised districts of Chengalpattu and Kancheepuram, as many as 32 out of 38 districts in Tamil Nadu have recorded per capita income that is above all India average, said the Economic Survey of Tamil Nadu 2025–26.**

Chengalpattu topped the list with Rs 7.47 lakh, followed closely by Kancheepuram at Rs 7.39 lakh. Chennai ranked third with Rs 5.77 lakh, significantly higher than the State average of Rs 3.13 lakh, said the survey, which presented a detailed district-wise Per Capita Net Domestic Product (PCNDP) data for 2023–24 prepared by the Department of Economics and Statistics

Apart from these districts in the northern belt, western districts also performed strongly. Namakkal (Rs 4.74 lakh), Tirupur (Rs 4.34 lakh), Tiruvallur (Rs 4.24 lakh) and Coimbatore (Rs 4.08 lakh) were well above the State average, reflecting robust industrial and commercial activity.

However, despite sustained efforts by the State government to ensure balanced and distributed development, a disparity of nearly five per cent persists between Chennai and its adjacent districts and the rest of the State.

Agrarian and rural-dominated districts remained at the lower end of the income spectrum. Nagapattinam, Cuddalore, Thanjavur, Pudukkottai, Mayiladuthurai, Ariyalur, Villupuram, Perambalur and Tiruvarur recorded per capita incomes below Rs 2 lakh, placing them among the bottom ten districts.

At current prices, Tamil Nadu ranked third among major Indian states in 2024–25 with a per capita income of Rs 3.62 lakh. Telangana topped the list with Rs 3.87 lakh, followed by Karnataka at Rs 3.80 lakh.

Even while acknowledging inter-district disparities, the State Planning Commission expressed confidence in achieving Tamil Nadu's ambitious one-trillion-dollar economy target by 2030. The report noted that forward-looking industrial policies continue to attract substantial domestic and global investments.

The development of sector-specific industrial parks, particularly Sipcot industrial estates with plug-and-play infrastructure, has further strengthened Tamil Nadu's industrial competitiveness, the report said.

**Sector-specific industrial parks, particularly Sipcot estates with plug-and-play infra, have strengthened TN's industrial competitiveness, the report said**

## Defence, chip firms ink pacts for Rs 6,000 cr investment

CHENNAI: Continuing to showcase its ability to attract big-ticket investments, the State government on Monday signed memoranda of understanding with two leading companies to invest nearly Rs 6,000 crore to set up defence and semiconductor units, with a potential to generate around 8,400 jobs. As per the MoUs signed in the presence of Chief Minister MK Stalin at the Secretariat on Monday, Aequs Group will invest Rs 4,000 crore in the aerospace and defence sector at Sipcot Industrial Park in Shoolagiri, Krishnagiri. The project is expected to create 7,000 jobs. NMB Minebea India will invest Rs 1,980 crore to establish a research and development centre in the semiconductor sector in Tiruvallur. The project is projected to generate 1,400 employment opportunities. At a separate event, the Chief Minister inaugurated 16 Uzhavar Angadis.

**District-wise per capita income in Tamil Nadu 2023-24 (Rs in lakh)**

| District | Per capita income |
|---|---|
| Chengalpattu | 7.47 |
| Kancheepuram | 7.39 |
| Chennai | 5.77 |
| Namakkal | 4.74 |
| Tirupur | 4.34 |
| Tiruvallur | 4.24 |
| Coimbatore | 4.08 |
| Krishnagiri | 3.87 |
| Erode | 2.94 |
| Dharmapuri | 2.78 |
| Madurai | 2.76 |
| Thoothukudi | 2.63 |
| Dindigul | 2.63 |
| Tiruchy | 2.61 |
| Salem | 2.52 |
| Tirupattur | 2.47 |
| Virudhunagar | 2.43 |
| Vellore | 2.42 |
| Tenkasi | 2.40 |
| Tirunelveli | 2.40 |
| Karur | 2.39 |
| Ranipet | 2.38 |
| Kanniyakumari | 2.33 |
| Theni | 2.20 |
| Tiruvannamalai | 2.10 |
| Ramanathapuram | 2.06 |
| Sivaganga | 2.04 |
| The Nilgiris | 2.03 |
| Thanjavur | 2.00 |
| Nagapattinam | 2.00 |
| Cuddalore | 1.98 |
| Mayiladuthurai | 1.87 |
| Kallakurichi | 1.86 |
| Ariyalur | 1.77 |
| Villupuram | 1.66 |
| Perambalur | 1.63 |
| Tiruvarur | 1.62 |









🎯 EXAM REMINDER – [20-02-2026] 🎯

🔥 GROUP 2 MAINS – 22.02.2026
✍️ Mains – 0️⃣2️⃣ Days ✔️

🔥 GROUP 2A MAINS – 15.03.2026
✍️ Mains – 2️⃣3️⃣ Days ✔️

🔥 GROUP 1 – 06.09.2026
✍️ Prelims – 198 Days ✅

🔥 GROUP 2 & 2A – 25.10.2026
✍️ Prelims – 247 Days ✅

🔥 GROUP IV – 20.12.2026
✍️ Exam – 303 Days ✅